Thalaivaasal
# தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்
வீடு 01 வாசல் 93 | thalaivaasaltv@gmail.com | புதன்கிழமை | ஜனவரி 06, 2021

## உக்ரேன் சுற்றுலாக்குழுவால் கொரோனாவின் அடுத்த அலை ஏற்படும் அபாயம்


### சஜித் அணி எச்சரிக்கை

உக்ரேனிய சுற்றுலாக் குழுவினரை நாட்டிற்குள் அனு மதித்துள்ளதன் மூலம் 03

## சுமந்திரனும் சாணக்கியனும் மகிந்தவுடன் சந்திப்பு

### மட்டு. போதனாவுக்கு உபகரணங்களை சேர்ப்பிக்க நடவடிக்கை





மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் புதிய இருதயவியல் பிரிவு ஆய்வகத்துக்குத் தேவையான உபகரணங்களை உடனடியாக வழங்க பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் இரா.சாணக்கியன் ஆகியோர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இருதயவியல் பிரிவில் உள்ள குறைபாடுகளை பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இருதயவியல் பிரிவுக்கான உபகரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு, சுகாதார அமைச்சருக்கு, பிரதமர் பணிப்புரை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இரு கிழமைகளில் கிடைக்க இருந்த வைத்திய 03

## தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதே இலங்கையின் எதிர்காலத்திற்கு நன்மை பயக்கும்

### கொழும்பு வந்த இந்திய வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு



ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதானது, இலங்கையின் எதிர்காலத்துக்கு நன்மை பயக்கும் என, இலங்கைக்கு மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் தெரி வித்துள்ளார். 03

## தேசியகீதத்தை மொழிபெயர்ப்பதை தடை செய்ய

### பௌத்த பிக்கு யோசனை

தேசிய கீதம் மொழி பெயர்க் கப்படுவதனை தடை செய்ய வேண்டு மென யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

புதிய அரசியல் அமைப்பு உருவாக்கும் நிபுணர் குழுவிடம் இந்த யோசனை முன் வைக்கப்பட்டுள்ளது.

தேசிய கீதம் இனி வரும் காலங்களில் மொழி பெயர்க்கப்பட்டு இசைக்கப்படுவதனை அனு மதிக்கக் கூடாது என இந்த யோசனையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தாய் நாட்டை பாதுகாக்கும் தேசிய இயக்கத்தின் தலைவர் எல்லே குணவன்ச தேரரினால் இந்த யோசனைத் திட்டம் நேற்றைய தினம் (05) நிபுணர் குழுவிடம் ஒப்ப டைக்கப்பட்டுள்ளது.

நாட்டின் இறைமைக்கும் பௌதீக ஒருமைப்பாட்டுக்கும் குந்தகம் ஏற்படுத்தும் வகையில் செயற்படுவோரின் சிவில் உரிமைகளை ரத்து செய்யும் வகையிலான சரத்து ஒன்றை புதிய 03

## கொழும்பு துறைமுக்தின் கிழக்கு முனையம் எந்தவொரு வெளிநாட்டவருக்கும் கிடையாது

### பிரதமர் மகிந்த தெரிவிப்பு

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் உரிமை அல்லது உரிமையின் பகுதி இலங்கை அரசாங்கத்தினால் வெளி தரப்பினருக்கு வழங்குவதற்கு தீர்மா னிக்கப்படவில்லை என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இன்று பாராளுமன்றத்தில் தெரி வித்தார்.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தில் நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானம் என்ன என்று பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசாநாயக்க இன்று சபையில் எழுப்பிய கேள்விக்கு பிரமதர் பதிலளித்தார்.

இதேவேளை தொற்று நோய் தொடர்பாக பாராளுமன்ற ஆலோசனை தெரிவுக்குழுவினால் அனுமதி வழங்கப்பட்ட பின்னர் உடனடியாக கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிரான தடுப்பூசி வகைகளை துரிதமாக நாட்டுக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சுகாதார அமைச்சர் இன்று பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் உப்புல் கலபதி பிரதமரிடம் கேட்ட கேள்வி ஒன்றுக்கு அமைச்சர் திருமதி பவித்ரா வன்னியாராச்சி பதிலயிக்கையில் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

## யாழ் கல்லுண்டாயில் மினி சூறாவளி



யாழ்ப்பாணம் கல்லுண்டாய் பகுதியில் இன்று மாலை திடீரென வீசிய சூழல் காற்றினால் அப்பகுதியில் உள்ள 09 வீடுகள் பகுதியளவில் சேதமடைந் துள்ளது.

இன்று மாலை யாழில் வீசிய சுழல் காற்றினால் 12 குடும்பங்களைச் சேர்ந்த 41 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவி பணிப்பாளர் சூரியராஜ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கல்லுண்டாய் ஜே/136 நவாலி தெற்கு கிராம சேவகர் பிரிவில் இன்று (ஜன-06) மாலை வீசிய 03




**தரணி எங்கும் தமிழராய் இணைவோம்**

# இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை



இலங்கைக்கு எதிராக ஐ.நா.வில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பொய்யானவை என்பதை மார்ச் மாத மனித உரிமைகள் கூட்டத்தொடரில் இலங்கை நிரூபிக்கும் என அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் இன்று (புதன்கிழமை) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் கருத்து தெரிவித்த அவர் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன், மீண்டும் புலனாய்வுப் பிரிவை பலப்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டார்.

மேலும் இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் 8 தீர்மானங்களை, முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கொண்டுவந்திருந்தார்.

அவ்வாறே 30 இன் கீழ் ஒன்று தீர்மானத்துக்கும் கடந்த நல்லாட்சி அரசாங்கம் இணை அனுசரனை வழங்கியது சரத் வீரசேகர தெரிவித்தார்.

இவ்வாறு இராணுவம் மற்றும் புலனாய்வுப் பிரிவைப் பலவீனப்படுத்தும் செயற்பாடுகளையே கடந்த அரசாங்கம் மேற்கொண்டது என கூறினார்.

இந்த நிலையில் இவை அனைத்தும் ஆதாரமற்றக் குற்றச்சாட்டு என்பதை நாம் இம்முறை ஜெனிவா அமர்வில் நிருபிப்போம் என்றும் அமைச்சர் சரத் வீரசேகர குறிப்பிட்டுள்ளார்.

# பாடசாலைகளை மீள ஆரம்பிக்க நடவடிக்கை

எதிர்வரும் திங்கட்கிழமை பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படவுள்ள நிலையில் இது குறித்த அனைத்து சுகாதார வழிகாட்டுதல்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார விதிமுறைகளை கடுமையாக பின்பற்றி பாடசாலைகளை மீண்டும் திறக்கும் செயன்முறை குறித்து அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்களுக்கு தெரிவிக்கப்படும் என கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு பொது சுகாதார பரிசோதகர்கள், சுகாதார மருத்துவ அதிகாரிகள் மற்றும் பிறரின் பங்களிப்புடன் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் தலைமையில் பெற்றோருடன் கலந்துரையாடலை நடத்துமாறு கல்வி அமைச்சு பாடசாலைகளுக்கு அறிவித்துள்ளது.

இந்நிலையில் இதுதொடர்பான கலந்துரையாடல்கள் இன்று (புதன்கிழமை) முதல் 10 வரை நடைபெறும் என கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.



ஜனவரி 11 ஆம் திகதி, 02 ஆம் வகுப்பு முதல் 13 ஆம் வகுப்பு வரையிலான அனைத்து மாணவர்களுக்கும் முதலாம் தவணை கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகவுள்ளன.

இதேவேளை தரம் 1 மாணவர்களுக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2 ஆம் வாரத்தில் கல்வி நடவடிக்கைகள் இடம்பெறும் என பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

அத்துடன், தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகள் தவிர்ந்த மேல் மாகாணத்தின் ஏனைய பிரதேசங்களில் அமைந்துள்ள பாடசாலைகளில் தரம் 11 ற்கான கல்வி நடவடிக்கை எதிர்வரும் 25 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தலைவாசல்
எங்கள் பாரம்பரியம்
Thalaivaasal

## தினம் ஒரு ஆரோக்கிய தகவல்

### கொழுப்பு மற்றும் எண்ணெய் வகைகள்

கொழுப்பு பொருட்கள் என்றால் ஆபத்து என பலர் நினைத்து எடுப்பதில்லை. ஆனால் எமது உடல் வளர்ச்சிக்கும் தொழிற்பாட்டிற்கும் அவசியமானது. இவற்றின் அதிக பாவனை தொற்றா நோய்களை ஏற்படுத்தலாம்.

எண்ணெய் நிறைந்த மீன் வகைகள் ஆரோக்கியமான எண்ணெய்மூலங்களாகும்(சூரை, கும்பிளா, கீரி) எண்ணைத் தன்மையான விதைகளில் ஆரோக்கியமான கொழுப்பு , நார்ச்சத்து, விற்றமின் E கனியுப்புக்கள் என்பன அடங்கியுள்ளன. கச்சான், கஜு/, எள்ளு பாதாம் பருப்பு என்பன நல்ல கொலஸ்ரோல் உள்ள விதைகள் ஆகும்.

பேக்கரி உணவுகள், பொரித்த உணவுகள், கேக், பிஸ்கட் போன்றவற்றில் ஆரோக்கியமற்ற ரான்ஸ் கொழுப்பு காணப்படுகிறது. இவற்றை முடிந்தளவில் தவிர்க்க வேண்டும். தற்போது பொதி செய்யப்படும் உணவுப்பொருட்களால் நிற குறியீட்டினால் கொழுப்பின் அளவும் குறிப்பிடப் படுகிறது.

**வைத்திய கலாநிதி**
**கோ.றஜீவ்**

# ஹோட்டல் கட்டணம் தொடர்பில் விசாரணை?

கடந்த காலத்தில் சில ஹோட்டல்களில் தனிமைப்படுத்தலுக்காக அறவிடப்பட்ட கட்டணங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என விளையாட்டு துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டில் இருந்து நாடு திரும்புபவர்கள் அதிக கட்டணங்களுடன் ஹோட்டல்களில் தனிமைப்படுத்தப்படுவதை நிறுத்தி அனைவரையும் இலவசமாக தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளார்.

எனவே ஹோட்டல்களில் தனிமைப் படுத்தலுக்காக மக்களிடம் கட்டணம் வசூலிக்கப்படுவது குறித்து விசாரிக்க வேண்டியதன் அவசியத்தையும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

# நல்லூரரான் செம்மணி வளைவு' பொங்கல் தினத்தன்று திறப்பு



நல்லூர் கந்தப் பெருமானின் அடியவர்களின் வேண்டுகளுக்கு அமைய நல்லூர் முருகன் தண்ணீர் பந்தல் சபையினரின் முயற்சியால் யாழ்ப்பாணம் செம்மணி வீதியில் புதிதாக பிரமாண்டமாக நிர்மாணிக்கப்பட்ட "நல்லூரரான் செம்மணி வளைவு" எதிர்வரும் 14 ஆம் திகதி பொங்கல் தினத்தன்று நண்பகல் 12 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாண மக்களின் கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களின் புனித வாழ்க்கை நெறியான கந்தபுராண கலாசாரத்தின் அடையாளங்கள் பல இவ்வளைவில் வனப்புற பிரதிபலிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்த வளைவு அமைக்க முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், நிதியொதுக்கீடுகளைப் பெற்றுக்கொடுத்ததோடு தனது சொந்த நிதி உதவிகளையும் வழங்கியிருந்தார். 2019 ஆண்டு ஒகஸ்ட் மாதம் குறித்த வளைவுக்கான அடிக்கல் முன்னாள் இராஜாங்க அமைச்சர் நாட்டி வைத்து வளைவின் கட்டுமாண பணிகளை ஆரம்பித்து வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் சைவ உணவகம் தனிமைப்படுத்தப்பட்டது

யாழ். நகரில் உள்ள பிரபல சைவ உணவகம் ஒன்றினை தனிமைப்படுத்தியுள்ளத சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை புலோலி பகுதியில் கொரோனா தொற்றுக்குள்ளான நபர் கடந்த 31ஆம் திகதி குறித்த உணவகத்திற்கு வந்து சென்றுள்ளார்.

இந்நிலையில் இன்று காலையில் இருந்து குறித்த உணவகம் சுகாதார அதிகாரிகளினால் தனிமைப்படுத்தப் பட்டுள்ளது.

மேலும் அங்கு கடமையாற்றிய ஊழியர்கள் 11 பேரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

# வவுனியாவில் சில பகுதிகள் முடக்கம்

வவுனியா பட்டானிச்சூரை சேர்ந்த இருவருக்கு கடந்த திங்கட்கிழமை கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில் கடந்த திங்கட்கிழமையில் இருந்து பட்டானிசூர் பகுதி பொலிஸாரால் தற்காலிகமாக முடக்கப்பட்டிருந்தது.

குறித்த பகுதியில் முதற்கட்டமாக முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் ஒரே குடும்பத்தை சேர்ந்த மேலும் ஐவருக்கு கொரோனா தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து பட்டாணிசூர் பகுதியில் நேற்றய தினம் இரவு இராணுவத்தினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டது.

இதேவேளை பட்டாணிசூர் பகுதியை சேர்ந்த பலர் வவுனியா பசார் வீதி மற்றும் நகரில் உள்ள அனேகமான வியாபார நிலையங்களை நடாத்தி வருவதுடன் ஊழியர்களாகவும் பணியாற்றிவருகின்றனர்.

அதனை கருத்தில் கொண்டு இன்று (புதன்கிழமை) காலை வவுனியா பசார் வீதியின் ஒருபகுதி, தர்மலிங்கம் வீதி, சந்தை வீதிகள் இராணுவம் மற்றும் பொலிஸாரால் முற்றாக முடக்கப்பட்டுள்ளதுடன், அங்குள்ள வியாபார நிலையங்களில் பணியாற்றுபவர்களிற்கு சுகாதார பிரிவினரால் முதற்கட்டமாக பிசீஆர் பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டு வருகின்றது.

இதேவேளை குறித்த வீதிகளிற்குள் தமது தேவை நிதித்தம் பயணித்த பொது மக்கள் அடையாள அட்டைகள் பரிசீலிக்கப்பட்டு, பட்டாணிசூர் பகுதியை சேராதவர்கள் பொலிஸாரால் வெளியில் விடுவிக்கப்பட்டு வருகின்றனர்.

# ஈ.டி.ஐ மற்றும் சுவர்ணமஹால் நிறுவனங்களின் பணிப்பாளர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்

ஈ.டி.ஐ மற்றும் சுவர்ணமஹால் நிறுவனங்களின் பணிப்பாளர் நால்வரும் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கபடுகின்றது.

ஈ.டி.ஐ மற்றும் சுவர்ணமஹால் நிறுவனங்களின் பணிப்பாளர் சபையைச் சேர்ந்த முன்னாள் உறுப்பினர் நாலக எதிரிசிங்க இன்று குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் சரணடைந்துள்ளார்.

இதேவேளை, ஜீவக எதிரிசிங்க, அஞ்சலி எதிரிசிங்க மற்றும் அசங்க எதிரிசிங்க ஆகியோர் நேற்று (05) மாலை குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

ஈ.டி.ஐ மற்றும் சுவர்ணமஹால் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா நேற்றைய தினம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு அறிவுறுத்தியிருந்தார்.

13.7 மில்லியன் ரூபாய் வைப்பு பணத்தை சட்டவிரோதமாக ஏற்றுக் கொண்டமை, முறைகேடாக பயன் படுத்தியமை மற்றும் பணமோசடி ஆகிய குற்றச்சாட்டுகளுக்கு அமைவாக அவர்கள் இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# மன்னார் எருக்கலம்பிட்டி செல்வதற்கு கட்டுப்பாடு

மன்னார் எருக்கலம்பிட்டி கிராமத்திற்கு பயண கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இன்று காலை முதல் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி. வினோதன் தெரிவித்துள்ளார்.

மன்னார் எருக்கலம்பிட்டி கிராமத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேருக்கு கொவிட்-19 தொற்றுறுதியானதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொவிட்-19 தொற்றுறுதியானவர்கள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை கொரோனா தடுப்பு வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

# கொரோனா நோயாளிகள் 761 பேர் பூரணமாக குணம்

இலங்கையில் கொரோனா தொற்றுக் குள்ளானவர்களில் இன்று (06) மேலும் 761 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனா தொற்றுக்குள்ளானவர்களில் 39,023 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதேவேளை, கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை 217 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரச பணியிலிருந்து ஓய்வு பெற்றார் சகாயம் ஐ.ஏ.எஸ்

தமிழகத்தில் நேர்மையான அதிகாரிக்கு உதாரணமாகக் காட்டப்படும் முன்னாள் மாவட்ட ஆட்சியர் சகாயம் (ஐ.ஏ.எஸ்) தனது விருப்ப ஓய்வு கடிதத்தை அரசிடம் கொடுத்திருந்தார். ஆனால், அது குறித்து முடிவெடுக்கப்படாமல் இருந்தது அரசு. இந்நிலையில் இன்று திடீரென்று சகாயத்தை பணியிலிருந்து விடுவிக்கும் முடிவை தமிழக அரசு அறிவித்துள்ளது.

மதுரை ஆட்சியராக இருந்தபோது, துணிச்சலுடன் கிரானைட் ஊழலை வெளிக்கொண்டு வந்தவர் சகாயம். கடந்த 7 வருடங்களாக தமிழ்நாடு அறிவியல் நகர துணைத்தலைவராக பதவி வகித்து வந்தார். இன்னும் பல துணிச்சலான செயல்களுக்கு சகாயத்தையே உதாரணமாகக் கைக்காட்டுவார்கள்.

தம் கருத்தை எவ்வித தயக்கமுமின்றி வெளிப்படுத்தும் இயல்பு கொண்டவர் சகாயம். இன்னும் மூன்று ஆண்டுகள் பணிகாலம் இருக்கும் சூழலிலும் விருப்ப ஓய்வு அறிவித்து, பணியிலிருந்து வெளியேறியது அதிர்ச்சியாகவே இருக்கிறது பலருக்கும். தம் பணிகளை சுதந்திரமாகச் செய்ய அனுமதி கிடைக்க வில்லை என்பது, அதிகாரம் இல்லாத பதவிகளுக்கு



மாற்றியதுமே இந்த முடிவை நோக்கி சகாயத்தை உந்தித் தள்ளியது என்கிறார்கள் அவருக்கு நெருக்கமானவர்கள்.

சகாயம் அடுத்து என்ன செய்வார் என்பதே பலரின் கேள்வி. ரஜினிகாந்த் கட்சி ஆரம்பிக்கும் முடிவில் இருந்தபோது சகாயத்தை அழைத்ததாகவும், சகாயம் சென்று சந்திக்க மறுத்து விட்டதாகவும் செய்திகள் வெளிவந்தன. ஒருவேளை அந்தச் சந்திப்பு நடந்திருந்தால் ரஜினி கட்சியின் முதல்வர் வேட்பாளராக சகாயம்கூட இருந்திருக்கலாம். ரஜினியே கட்சி தொடங்க வில்லை எனும்போது அது குறித்து யோசிக்க வேண்டியதில்லை.

சில வாரங்களுக்கு முன் மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் ஒரு வீடியோ வெளியிட்டிருந்தார். அதில் சூரப்பா மீதான விசாரணையைக் கண்டித்திருந்தார். மேலும், சகாயம் போன்ற நேர்மையான அதிகாரிகள் பழி வாங்கப்படுவது பற்றியும் குறிப்பிட்டிருந்தார். மேலும் ஒரு பேட்டியில்கூட, சகாயம் (ஐ.ஏ.எஸ்)போன்றவர்கள் எங்களோடு இணைய வேண்டும் என்றும் அழைப்பு விடுத்திருந்தார் கமல். எனவே, கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யத்தில் சகாயம் (ஐ.ஏ.எஸ்) சேர்வதற்கான வாய்ப்புகள் இருப்பதாகத் தெரிகிறது.

சகாயத்தின் நலன்விரும்பிகள் மக்கள் பாதை எனும் அமைப்பை நடத்தி வருகிறார்கள். அதன் நிகழ்ச்சியில் சகாயம் கலந்துகொள்வது வழக்கம். அநேகமாக அந்த அமைப்புக்குத் தலைமை தாங்கி, கமல் கட்சியோடு இணைந்து தேர்தலைச் சந்திக்கக்கூடும் என்று சிலர் கூறுகிறார்கள். எப்படியும் இன்னும் ஓரிரு வாரங்களில் சகாயம் தனது முடிவை அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பெண் ஒருவர் துஸ்பிரயோகம் பிரதேச சபை உறுப்பினர் கைது

பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய யக்கலமுல்ல பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டு ஜனவரி 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

யக்கலமுல்ல பொலிஸ் பிரிவிற் குட்பட்ட நானியாதெனிய படகெட்டிய பகுதியில் 27 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாய் ஒருவர் நேற்று மாலை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கு அமைய குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் விதவை எனவும் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய பிரதேச சபை உறுப்பினர் அவருடைய உறவினர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### யாழ். கல்லூண்டாயில்...

சுழல் காற்றின் தாக்கத்தின் காரணமாக 9 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதோடு 12 குடும்பங்களைச் சேர்ந்த 41 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ் மாவட்டஅனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு சுழல் காற்றினால் வீடுகள் பாதிக்கப்பட்ட வீட்டு உரிமையாளர்களுக்கு அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் தற்காலிகமாக தறப்பாள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

### தேசியகீதத்தை...

அரசியல் அமைப்பில் உள்ளடக்க வேண்டுமெனவும் அவர் தனது பரிந்துரைகளில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் தேசிய கீதம் சிங்கள, தமிழ் மொழிகளில் பாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### சுமந்திரனும்...

உபகரணங்களை இடைநிறுத்தி, அவற்றை களுத்துறை மாவட்டத்துக்கு மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதமரின் கவனத்துக்குக் கொண்டுவந்ததையடுத்து, உபகரணங்களை உடனடியாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து கருத்து வெளியிட்ட இரா.சாணக்கியன் எம்.பி, "கிழக்கு மாகாணத்தில் எந்தவொரு வைத்தியசாலையிலும் இந்த உபகரணம் இல்லாமையால் பல வருடங்களாக மக்கள் உரிய நேரத்துக்கு சிகிச்சையின்றி பல சிரமங்களுக்கும் மத்தியில் வெளி மாகாணங்களுக்குச் சென்று சிகிச்சை பெற்று வருகின்றனர். இதனால் காப்பாற்றப்பட்டிருக்க வேண்டிய பல உயிர்களை இழந்துள்ளோம்.

"இந்தப் பிரச்சினை இனி முடிவுக்குக் கொண்டுவரப்படும். எமது கட்சி மற்றும் எனது செயல்பாடுகள் அனைத்தும் எமது மக்கள் சார்ந்ததாகவே என்றும் இருக்கும். நாம் வாய்ச்சொல் வீரர்களல்ல" எனக் குறிப்பிட்டுள்ளார்.

### உக்ரேன்...

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றின் அடுத்த அலையை வரவேற்கும் செயற்பாடு என சஜித் அணி விமர்சித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சி. அலவத்துவல இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன், கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ள உக்ரேனிய பிரஜைகளுக்கு, புதிய வகை கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதா எனும் சந்தேகம் எழுந்துள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

குறித்த சுற்றுலாக்குழுவினர் தொடர்பில் நிபுணர்களும் பொதுமக்களும் சந்தேகம் கொண்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், கொரோனா தொற்றை கட்டுப்படுத்த சுகாதார தரப்பினர் மேற்கொண்டுள்ள செயற்பாடுகளை பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளையே அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாகவும், நாடாளுமன்ற உறுப்பினர் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சி. அலவத்துவல குற்றஞ்சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### தமிழர்களின்...

அரசியலமைப்பின்13ஆவது திருத்தச் சட்டம் ஊடாக வாக்குறுதியளித்தபடி அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வைக் கொண்டுவர இலங்கை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தியாவின் நிலைப்பாட்டை வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் மீண்டும் வலியுறுத்தினார்.

இந்தியாவிலிருந்து கோவிட் -19 தடுப்பூசி பெற இலங்கை ஒப்புக்கொண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கோரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டதிலிருந்து இந்திய தரப்பு இலங்கைக்கு மருத்துவ உதவிகளை செய்து வருவதை அவர் நினைவு கூர்ந்தார்.

இன்று பிற்பகல் இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவுடன் நடத்திய கூட்டு ஊடக சந்திப்பில் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் இதனைத் தெரிவித்தார்.

"ஒன்றுபட்ட இலங்கையின் நல்லிணக்கத்திற்கு இந்தியா தொடர்ந்து ஆதரவளிக்கும் என வலியுறுத்திய அவர் சமத்துவம், நீதி, அமைதிக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவளிக்கும்" என்றும் எஸ்.ஜெய்சங்கர் குறிப்பிட்டார்.

வெளியுறவு அமைச்சர்கள் இரு நாடுகளுக்கும் இடையிலான மீன்வள பிரச்சினை குறித்தும் விவாதித்தனர்.

இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெயசங்கர் இன்று காலை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுடன் இருதரப்பு கலந்துரையாடல்களை நடத்தினார்.

அவர் இன்று மாலை பிரதமர் மகிந்த ராஜபக்சவுடன் கலந்துரையாடினார்.

# கல்வியியல் கல்லூரியில் கற்கை நெறிகளை பூர்த்தி செய்தவர்களுக்கான முக்கிய அறிவிப்பு

ஆசிரியர் பயிற்சி கல்லூரிகளிலிருந்து வெளியேறிய 3,772 பேரை சேவைக்கு இணைத்துக் கொள்ளும் செயற்பாடு எதிர்வரும் 2 வாரங்களுக்குள் முன்னெடுக்கப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

எனவே அவர்களுக்கான நியமனக் கடிதங்களை அவர்களின் வீடுகளுக்கே அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் பீ.கே.எஸ். சுபோதிகா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 11 ஆம் திகதி பாடசாலை கல்வி செயற்பாடுகள் ஆரம்பமாவதற்கு முன்னர், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் டிப்ளோமா கற்கை நெறிகளை பூர்த்தி செய்தவர்களுக்கான நியமன கடிதங்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

புதிய நியமனங்கள் வழங்கப்படும் ஆசிரியர்களில் 1000 பேர் தேசிய பாடசாலைகளுக்கு நியமிக்கப்படவுள்ளதுடன், ஏனைய அனைவரும் மாகாண பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளனர்.

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் மற்றும், இறுதி ஆண்டு பரீட்சையில் பெற்றுக் கொள்ளப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் இந்த ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

# பிரிட்டனின் உயர் விருதுகளை பெறும் இலங்கையர்கள்

பிரித்தானியாவின் உயரிய கௌரவ விருது பெற்றுக்கொள்ளவுள்ளவர்கள் குறித்த முக்கிய அறிவித்தல் வெளியாகியுள்ளது.

பிரித்தானியாவிலுள்ள மக்களின் சிறந்த சாதனைகளை அங்கீகரிக்கும் வகையில் பிரித்தானிய மாகா ராணியின் புத்தாண்டு கௌரவ பட்டியல் வெளியிடப்பட்டு வருகின்றது.

பேராசிரியர் ரவி சில்வா, பேராசிரியர் Mohan Edirisinghe, பேராசிரியர் Ramani Moonesinghe, Gajan Wallooppillai, Dr Shikandhini Kanagasundrem மற்றும் ஆழாயஅநன உயணசயவா உயடநநஅ முளளஅயெ ஆகியோருக்கு பிரிட்டிஷ் பேரரசின் ஆணைக்குழு (CBE) விருது வழங்கப்படுகிறது.

பேராசிரியர் ரவி சில்வா, கடந்த மூன்று தசாப்தங்களாக அறிவியல், கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான அவரது சிறந்த சேவைகளுக்காக CBE விருது பெறவுள்ளார்.

பேராசிரியர் Edirisinghe> சுகாதாரத்துறையில் மேம்பட்ட பொருட்களை உற்பத்தி செய்வதற்கான புதிய முறைகளை உருவாக்குவதில் முன்னணியில் உள்ளார்.

மயக்க மருந்து, Perioperative மற்றும் தீவிர சிகிச்சை ஆகியவற்றில் ஆற்றிய சேவைகளுக்காக பேராசிரியர் Ramani Moonesinghe-க்கு OBE விருது வழங்கப்படுகிறது.

Gajan Wallooppillai, சமத்துவம் மற்றும் சமூக ஒற்றுமைக்காக அவர் ஆற்றிய சேவைகளுக்காக OBE விருது பெறுகிறார்.

நுண்ணுயிரியல், தொற்று தடுப்பு மற்றும் கட்டுப்பாடு, குறிப்பாக நடவடிக்கைகளின் போது ஆற்றிய சேவைகளுக்காக Dr Shikandhini Kanagasundrem-இற்கு OBE விருது வழங்கப்படுகிறது.

இங்கிலாந்தில் உள்ள இலங்கை சமூகத்திற்கு ஆற்றிய சேவைகளுக்காக Mohamed Hazrath Haleem Ossman-க்கு OBE விருது வழங்கப்படுகிறது.

# கண்டி கட்டட விபத்து காரணம் வெளியானது

கண்டி - பூவெலிகட பகுதியிலுள்ள ஐந்து மாடி கட்டடமொன்று தாழிறங்கியமை தொடர்பாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகத்தால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் இறுதி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி குறித்த கட்டடம் உரிய தரத்தில் அமைக்கப்படாமையே இந்த அனர்த்தத்திற்கான காரணம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்துள்ளார்.

மேலும் நிலத்தில் எவ்வித பிரச்சினையும் இல்லை எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் செப்டம்பர் மாதம் 20ஆம் திகதி கண்டி - பூவெலிகட பகுதியில் ஐந்து மாடி கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை மற்றும் கைக்குழந்தையும் உயிரிழந்தனர். மேலும் இருவர் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

அத்தோடு, இந்த சம்பவம் தொடர்பாக குறித்த கட்டடத்தின் உரிமையாளர் அனுர லெவ்கே கைது செய்யப்பட்டிருந்தார் என்பதுடன், தொடர்ச்சியாக விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

# பஸ்ரியன் அடிகளாரின் நினைவேந்தல்



படுகொலை செய்யப்பட்ட அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளாரின் 36ஆவது ஆண்டு நினைவு நாள் இன்று (புதன்கிழமை) மன்னாரில் நினைவு கூரப்பட்டது.

வங்காலை புனித ஆனால் ஆலயத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவல் பெர்னாண்டோ அண்டகை தலைமையில் இன்று காலை 6 மணிக்கு விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதோடு, ஆலய வளாகத்தில் அமைந்துள்ள அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளாரின் சிலைக்கு முன்பாக நினைவுதின நிகழ்வு இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து அருட்பணி மேரி பஸ்ரியன் சமூக முன்னேற்றக் கழகத்தின் ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் வங்காலை பங்குத்தந்தை, உதவி பங்குத்தந்தை மற்றும் ஆலய மேய்ப்பு பணி சபையினர், கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினர், பங்கு மக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது மன்னார் பொது வைத்தியசாலையில் இருந்து சென்ற வைத்தியர்கள், தாதியர்கள், பணியாளர்கள் இணைந்து மிகவும் சிறப்பான முறையில் இரத்ததான நிகழ்வை நடாத்தினர்.

இரத்த தான நிகழ்வைத் தொடர்ந்து தேவையுடையவர்களுக்கு உதவிகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# லெபனானில் 25 நாட்களுக்கு முழு பொது முடக்கம்!

லெபனானில் கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்று பரவல் தீவிரமடைந்துள்ளநிலையில், எதிர்வரும் 25 நாட்களுக்கு முழு பொது முடக்கத்தை அமுல்படுத்த அமைச்சர்கள் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் வியாழக்கிழமை முதல் பெப்ரவரி முதலாம் திகதி வரை தொடர்ந்து 25 நாட்கள் பொதுமுடக்கம் அமுல்படுத்தப்படவுள்ளது.

பல்பொருள் அங்காடிகள் மற்றும் மருந்தகங்கள் மாலை 5 மணி வரை செயற்படும். இதைத்தவிர அனைத்து கடைகளும் உணவகங்களும் மூடப்படும்.

மேலும், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பத்திரிகையாளர்களை தவிர மாலை 6.00 மணி முதல் அதிகாலை 5.00 மணி வரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சுகாதாரத்துறை அமைச்சர் ஹமாத் ஹாசன் கூறுகையில், 'கொரோனா நோயாளிகளுக்கு மருத்துவமனையில் அதிக படுக்கைகள் இல்லாத நிலையில், நாட்டின் நிலைமை ஆபத்தான நிலையை எட்டியுள்ளது.

இதனை தடுக்கும் வகையில் புதிய பொதுமுடக்கத்தை செயற்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது' என கூறினார்.

# யாழ்.பல்கலை மாணவர்கள் போராட்டம் முடிவுக்கு வந்தது

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாயிலில் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மாணவர்களின் போராட்டம் நேற்று (செவ்வாய்க்கிழமை) இரவு முடிவுக்கு வந்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா மாணவர்களுக்கு நீராகாரம் கொடுத்து உணவு தவிர்ப்பு போராட்டத்தை முடித்து வைத்துள்ளார்.

கடந்த வருடம் ஒக்டோபர் 08ஆம் திகதி கலைப்பீட மாணவர்களுக்கு இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையைத் தொடர்ந்து ஏற்பட்ட மோதல் சம்பவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து, கலைப்பீட மூன்றாம் வருட மாணவர்களுக்கு பல்கலைக்கழகப் பேரவையினால் தண்டனை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இதனையடுத்து, நேற்று முன்தினம் திங்கட்கிழமை முதல் தண்டனை வழங்கப்பட்ட மாணவர்கள் தம்மைத் தண்டனைகளில் இருந்து விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து உணவு தவிர்ப்பு போராட்டம் ஒன்றை ஆரம்பித்திருந்தனர்.

இதனையடுத்து, நேற்று முன்தினம் மாலை பல்கலைக்கழகத் துணைவேந்தர் தனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, மனிதாபிமான அடிப்படையில் மாணவர்கள் பல்கலைக்கழகத்தினுள் நுழைவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை உடனடியாக விலக்கிக்கொள்வதாக அறிவித்ததோடு, பின்னிரவில் மாணவர்கள் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டிருந்த இடத்துக்கு நேரடியாகச் சென்று தனது நிலைப்பாட்டை விளக்கப்படுத்தியிருந்தார்.

எனினும் தங்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைகளில் இருந்து தாம் நிபந்தனையற்ற முறையில் விடுவிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி மாணவர்கள் நேற்று மாலை வரை தமது உணவு தவிர்ப்பு போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

இந்த நிலையில், நேற்று மீண்டும் மாணவர்கள் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டிருந்த இடத்துக்குச் சென்ற துணைவேந்தர் உணவு தவிர்ப்பு போராட்டத்தை கைவிடுமாறு மாணவர்களிடம் விநயமாகக் கேட்டுக்கொண்டார்.

மாணவர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் உள்நுழைவுத் தடையை நீக்கும் அதிகாரம் தனக்குண்டு என்பதையும் மாணவர்கள் பல்கலைக்கழகத்தினுள் வந்து தமது வழமையான செயற்பாடுகளின் மூலம் அந்தந்தத் துறைத் தலைவர்கள் மற்றும் பீடத்தின் விரிவுரையாளர்களின் நல்லெண்ணத்தை வெல்வதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

மேலும் வைத்தியர்களின் அறிவுறுத்தல்களுக்கு அமைய மாணவர்கள் தொடர்ந்தும் உணவு தவிர்ப்பில் ஈடுபடுவது ஆரோக்கியமானதல்ல என்பதைச் சுட்டிக்காட்டியதுடன், மாணவர்கள் உணவு தவிர்ப்பைக் கைவிட்டு, தன்னால் வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தைத் திறவுகோலாகப் பயன்படுத்த முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இதனையடுத்து, போராட்டத்தைக் கைவிடுவதற்கு மாணவர்களும் முன்வந்தனர். பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவர் ஆலோசகர், மாணவர் நலச் சேவை உதவிப் பதிவாளர், மாணவ ஒழுக்காற்று அதிகாரி மற்றும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் ஆகியோர் முன்னிலையில் துணைவேந்தர் மாணவர்களுக்குப் பால் வழங்கி உணவு தவிர்ப்பை நிறைவுக்குக் கொண்டுவந்தார்.